**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண்.65/2018**
**வாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: பரமசிவம் (வா.சா.1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் திரு.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி ( 3,4ம் பிரதிவாதிகள் தரப்பு):-**

தாவா சொத்து அமைந்துள்ள தோட்டத்தின் பெயர் சின்னத்தோட்டம் என்றால் சரிதான். நான் வா.சா.ஆ .1 பாகபிரிவினை எழுதி பதிவு செய்தபோது பார்த்த வில்லங்க சான்றில் 3,4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை 12.06.1966 பாகரார் பத்திரம் வில்லங்கத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி வில்லங்கம் பார்த்தபோது 12.06.1966ல் ஏற்பட்ட பாககரார் பத்திரத்தில் வில்லங்கம் காண்பித்தது என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் குப்பணகவுண்டரும், சின்னப்ப கவுண்டரும் 12.06.1966ல் பாககரார் செய்து கொண்ட பத்திரத்தை எடுத்துபார்த்து தெரிந்துகொண்டேனா என்றால் இந்த பிரச்சனை சம்பந்தமாக எடுத்து பார்த்து தான் தெரிந்துகொண்டேன். தாவா சொத்தில் பழைய சர்வே எண்.677-A என்றால் சரிதான். சர்வே எண்.677-Aல் சின்னப்பகவுண்டருக்கு 12.06.1966 பாக பத்திரப்படி 30 செண்ட் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அவருக்கு 18.5 செண்ட் தான் பாத்தியப்பட்டது.

2. நான் இந்த வழக்கில் 12.06.1966 பாக பத்திரத்தை பொறுத்து எந்த ஆட்சேபணையும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகபரிவினைக்கு பிறகு சின்னப்பகவுண்டர் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பட்டா படி புஞ்சை கொளாநல்லி கிராமம் ரி.ச.எண்.101/6ல் 8.5 ஏர்ஸ் விஸ்தீரணம் உள்ள பூமி முழுவதும்

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 12:18:23 +0530

சின்னப்பகவுண்டர் பெயரில் தனி பட்டாவாக தாக்கல் ஆகி உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா 23.04.2010ல் பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். இதன் பட்டா எண்.256 என்றால் சரிதான். மேற்படி பட்டாவை குறியீடு செய்ய எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரிதான். **பட்டா பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூல ஆவணங்களை இதுவரை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மூல ஆவணங்களை தாக்கல் செய்தால் தான் என்னுடைய முன்னோர்கள் குறித்து அறுதியிட்டு கூறமுடியும் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள ரங்கப்ப கவுண்டரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரங்கப்ப கவுண்டர் எந்த தேதி, மாதம், வருடம் இறந்தார் என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். ரங்கப்ப கவுண்டரின் மனைவி பெயர் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, அவர் மனைவி பெயர் சின்னம்மாள். சின்னம்மாள் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை, அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. சின்னம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. ரங்கப்ப கவுண்டரின் மனைவி தான் சின்னம்மாள் என்பதை நிரூபிக்க திருமண அழைப்பிதழோ அல்லது வேறு ஆவணங்களோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, 1916ம் ஆண்டு பத்திரத்தில் ரங்கப்பகவுண்டரின் மனைவி சின்னம்மாள் என்று உள்ளது. 1916ம் வருடத்திய பத்திரம் என்ன பத்திரம் என்றால் ரங்கப்ப கவுண்டர் தனது மகன் செங்கோட கவுண்டருக்கு Made over செய்து கொடுத்த பத்திரம். 1916ம் வருட ஆவணத்தில் குறிப்பிட்டு நபர்கள் எனது முன்னோர்கள் தான் என்பதை நிரூபிக்க நான் அவர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பரம்பரை பரம்பரையாக எனது முன்னோர்கள் அனுபவித்தற்கான வருவாய் துறை ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் என் முன்னோர்களுக்கும் ரி.ச.எண்.101/6 காலையில் எந்த உரிமையும், அனுபவமும் இல்லை அதனால் தான் வா.சா.ஆ.1ல் கண்டுள்ள மூல ஆவணங்களை தாக்கல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN
Date: 2026.03.17 12:18:28 +0530

செய்யாமல் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 பாக பத்திரத்தில் பக்கம் 22ல் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்களுக்கான செக்குபந்தியில் மணி பூமிக்கும் கிழக்கு என்று உள்ளது என்றால் சரிதான். மணி என்பது 4ம் பிரதிவாதியை குறிக்கும் என்றால் சரிதான். சொத்து குறிப்பிடப்பட்டு மொத்த விஸ்தீரணம் 54 1/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள தவறை திருத்த நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 4ம் பிரதிவாதி மணிக்கு பாத்தியப்பட்ட பூமியின் சர்வே எண்.101/6 என்றால் சரிதான். வா.சா.ஆ.1 எழுதுவதற்கு முன்பு இருந்தே 4ம் பிரதிவாதி மணிக்கு சர்வே எண்.101/6ல் பூமி உள்ளது என்றால் சரிதான். தற்போதும் 4ம் பிரதிவாதி மணி தான் சர்வே எண்.101/6ல் உரிமையாளராக சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, எங்களுக்கும் பாத்தியம் உள்ளது. தாவா சொத்து சம்பந்தமான உரிமை பிரச்சனை சுமாராக எத்தனை ஆண்டு காலமாக இருந்து வந்துள்ளது என்றால் தாத்தா பழனியப்பகவுண்டர் காலத்தில் இருந்தே இருந்து வந்துள்ளது. தாத்தா பழனியப்பகவுண்டர் காலத்தில் இருந்தே தாவா சொத்தில் உரிமை பிரச்சனை இருந்து வருவது சம்பந்தமாக இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. தாவா சொத்தை நானும் அனுபவித்து வருகிறேன் என்பதை காட்ட அடங்கல் பதிவேடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தற்சமயமாக நாங்கள் பாகம் பிரித்து கொண்ட பின்னிட்டு அடங்கல் பதிவேடு உள்ளது. மேற்படி அடங்கல் பதிவேட்டை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகம் இல்லை. இன்றளவும் அடங்கல் பதிவேடு சின்னப்பகவுண்டர் பெயரிலேயே இருந்து வருகிறது, அதனால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ரி.ச.எண்.101/6 பட்டாவில் தாவா சொத்தில் உரிமையே இல்லாத நான் வா.சா.ஆ.1 ஐ மோசடியாக தயார் செய்து அதில் பெயர் சேர்த்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் ஈடுகடன் எழுதிகொடுத்தற்கு பின்பு யாரால் எப்போது தீர்க்கப்பட்டது என்று என்னால் சொல்ல இயலாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 12:18:33 +0530

கந்தாய ஆவணம் யார் எப்போது கந்தாயம் முடிவுற்று தீர்த்துகொண்டார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.2,3 ஆவணங்கள் தாவா சொத்துக்கள் சம்பந்தப்பட்டது அல்ல, அது 3,4 பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. ஆதியில் 3,4 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு 30 செண்ட் இருந்தது என்றும், பின்னிட்டு ரி சர்வேயின் போது 21 செண்ட் ஆக குறைந்துவிட்டது என்றும், அதன்படி இந்த பிரதிவாதிகளின் முன்னோர் சின்னப்பகவுண்டர் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வந்தார் என்றும், ரி.ச.எண்.101/6ல் 3,4 பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் எந்த பாத்தியமோ, உரிமையோ இல்லை என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகளுக்கு சொந்தமான ரி.ச.எண்.101/6 பூமியை நான் மோசடியாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 3,4, பிரதிவாதிகளின் எதிர் கோரிக்கான பரிகாரப்படி செலவு தொகையுடன் தாவா தீர்ப்பாக வேண்டும் என்றும், இந்த வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.03.17 12:18:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.